# 4

# உலகளாவிய சகோதரத்துவம்

*"அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு ... இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத் தோற்ற முதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது" (அப். 15:15-18).*

எட்டு வயதான பையன்கள் இருவர் பொது இடத்தில் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளத் தொடங்கினர். அதனால் சிறுமைப்பட்ட அவர்களின் தாய்மார்கள் அவர்கள் இருவரையும் பிரித்து விட்டு, "சரி சரி! சண்டையைத் தொடங்கியது யார்?" என்று கேட்டார்கள். அந்தப் பையன்களில் ஒருவன் சிணுங்கல்களுக்கிடையே, "அவன் என்னைப் பதிலுக்கு அடித்த பொழுதுதான் இது எல்லாம் தொடங்கிற்று!" என்று விளக்கப்படுத்தினான். இது ஒரு எட்டு வயதுச் சிறுவனின் செயல்பாடாகத் தோன்றுகின்றது அல்லவா?

இருப்பினும், ஒரு சண்டையை/மோதலை யார் தொடங்கினார் என்பதல்ல ஆனால் அது நீடித்திருக்கும் குறைபாடு எதுவுமின்றி தீர்க்கப்பட முடியுமா அல்லவா என்பதே அதன் உண்மைப் பிரச்சனையாக உள்ளது. ஒரு மோதலானது மோசமாகக் கையாளப்பட்டால் அல்லது கண்டு கொள்ளாது விடப்பட்டால், அது நெருங்கிய நண்பர்களுக்கிடையே நீடித்த பிளவை விளைவிக்கக்கூடும் என்பதை நாம் அறிகின்றோம்.

அப். 15ன்படியாக, தொடக்க காலத்தின் சபையானது போதித்தலில் ஒரு மோதலை அனுபவித்திருந்தது, இது ஐக்கியத்தில் ஒரு இடர்பாடாக மாறியது. யூதேயாவிலிருந்து வந்திருந்த சில மனிதர்கள், மோசேயின் முறைமைப்படிப் புறஜாதியார் விருத்தசேதனம் பெறவில்லையென்றால் அவர்கள் உண்மை நிலையில் கிறிஸ்தவர்களாக மாட்டார்கள் என்றும் அவர்கள் இரட்சிக்கப்பட முடியாது என்றும் போதித்துக் கொண்டிருந்தனர் (வ. 1). புறஜாதியாரின் இரட்சிப்புக்கான திட்டத்தில் இந்த யூத மார்க்கப் போதகர்கள் இன்னுமொரு படியைக் கூட்டியிருந்தனர்: விருத்தசேதனம். கிறிஸ்தவம் பற்றிய அவர்களின் கண்ணோட்டமானது பவுலும் பர்னபாவும்

தங்களின் ஊழியத்தில் பிரசங்கித்திருந்த ஏவப்பட்ட செய்திக்கு நேர் எதிரானதாக இருந்தது. இந்தக் காரணத்தினால், பவுலும், பர்னபாவும் யூதேயாவிலிருந்து வந்திருந்த இந்தத் தவறாக வழி நடத்தப்பட்ட, போதகர்களுக்கு எதிர்த்து நின்று நீடிய கலந்துரையாடலையும் விவாதத்தையும் அவர்களுடன் மேற்கொண்டனர் (வ. 2).

போதனையில் இருந்த கருத்து வேறுபாடு தீர்த்து வைக்கப் படாதிருந்தது, மற்றும் எதிர்காலக் கிறிஸ்தவத்தைப் பாதித்திருக்கக்கூடிய ஒரு பிரிவினை அங்கு எழுந்தது. இடர்ப்பாட்டினால் எச்சரிப்புப் பெற்ற அந்தியோகியாவிலிருந்த சகோதரர்கள், உபதேசத்தின் இந்தக் கருத்துப் பற்றி அப்போஸ்தலர்கள் மற்றும் மூப்பர்களிடம் கலந்து ஆலோசிப் பதற்காகப் பவுலையும் பர்னபாவையும் மற்றும் பிற சகோதரர்களையும் எருசலேமுக்கு அனுப்பத் தீர்மானித்தனர்.

ஏவப்பட்ட அப்போஸ்தலராயிருந்த பவுல், புறஜாதியாரின் இரட்சிப்பு பற்றிய தேவனுடைய சத்தியத்தைப் பெற்று அதைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். இருப்பினும் சபையின் ஒருமைப்பாட்டைக் காப்பதற் காக இந்த விஷயத்தைக் குறித்துத் தேவன் வெளிப்படுத்தியிருந்தது என்ன என்பதைக் காண்பிக்கும் நோக்கத்திற்காக ஏவப்பட்ட மனிதர்களை ஒன்று கூடச் செய்வதற்கு அவர் எருசலேமுக்குச் சென்றார். எருசலேமில் ஒரு விசேஷக் கூட்டம் நடைபெற்றது, அதில் இந்தக் கேள்வியானது அப்போஸ்தலர்களாலும் சபையின் மூப்பர்களாலும் எடுத்துரைக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் பேதுரு எழுந்து நின்று தேவன் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை என்று உறுதிப்படுத்தினார். கொர்நேலியுவின் வீட்டார்மேல் பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்ட நிகழ்ச்சியானது (அப். 10:44-48), தேவன் யூதர்களை இரட்சித்த அதே வழிமுறையிலேயே புறஜாதியாரையும் இரட்சிப்பார் (அப். 15:7-11) என்பதைப் பேதுருவுக்குப் போதித்திருந்தது. பவுலும் பர்னபாவும் கூட, யூதருக்குப் பிரசங்கிக்கப்பட்ட அதே சுவிசேஷத்தைக் கொண்டு தேவன் புறஜாதியாரைத் தங்கள் பிரசங்க ஊழியத்தில் எவ்விதம் இரட்சித்திருந்தார் என்பதை எடுத்துரைத்தனர் (அப். 15:12). கொடுக்கப்பட்டிருந்த உரைகள் யாவற்றையும் யாக்கோபு கடைசியில் தொகுத்துக்கூறி, இந்தக் கேள்விக்கு ஏவுதல் பெற்ற வெவ்வேறு மனிதர்களுக்குத் தேவன் எதை வெளிப்படுத்தியிருந்தார் என்பதைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முடிவினைக் கொண்டு வந்தார் (அப். 15:13-21). அவருடைய முடிவு பின்வருமாறு இருந்தது: தேவன் யூதரையும் புறஜாதியாரையும் ஒரே திட்டத்தின் மூலமாக இரட்சித்தபடியால் தேவனு டைய இராஜ்யத்தினுள் பிரவேசிக்கும் கதவை அவர் யூதர்களுடன் சமானமான அளவிலிருக்கும்படிப் புறஜாதியாருக்கும் திறந்து விட்டிருந்தார்.

சபையின் உலகளாவிய சகோதரத்துவம் பற்றி யாக்கோபு தமது கருத்தை நிரூபிக்கையில், புறஜாதியாரைக் கொண்டு வருவதற்கான தேவனு டைய நோக்கம் பற்றிய ஒரு தீர்க்கதரிசன முன்னுரைத்தலான ஆமோஸ் 9:11, 12ஐ மேற்கோள் காண்பித்தார்:

> எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப் பின்பு திரும்பி வந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளை யெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத் தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது (அப். 15:16-18).

அவர்களின் மத்தியில் பேதுருவால் உரைக்கப்பட்ட வார்த்தைகள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கு முற்றிலும் ஒத்திருந்ததாகக் கூறிய யாக்கோபு பிறகு, புறஜாதியாரைக் குறிப்பிட்டிருந்த ஆமோஸின் இந்தத் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காண்பித்தார். சபை நிலைநாட்டப்பட்ட நாளான வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தப் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளல் பற்றிச் சுட்டிக்காட்டியிருந்த பேதுரு, ''தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது'' (அப். 2:16) என்று கூறினார். யாக்கோபு, ''அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது'' (அப். 15:15) என்று கூறினார். ஏவப்பட்ட ஒரு மனிதர் தம்முன் உள்ள ஒரு நிகழ்ச்சி, சூழ்நிலை அல்லது செயல்பாட்டைப் பார்த்து, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் ஒன்றை பின்னோக்கித் திரும்பிச் சுட்டிக்காட்டி "தீர்க்கதரிசிகள் இதைத் தான் முன்னுரைத்தனர்'' என்று கூறும் பொழுது, தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை நாம் தவறின்றிப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆமோஸின் தீர்க்கதரிசனமானது சபையின் உலகளாவிய சகோதரத் துவத்தை முன்னுரைத்தது. அது, கிறிஸ்துவின் சரீரத்தினுள் யூதரும் புறஜாதியாரும் பிரவேசித்து கறைகளற்ற மற்றும் சமாதானம் நிறைந்த ஐக்கியத்தில் அவர்கள் ஒன்றாக வாசம் பண்ணுவதைச் சித்தரித்தது. கொர்நேலியுவின் குடும்பத்தாருக்குப் பேதுருவும், மற்ற புறஜாதியாருக்குப் பவுலும் பிரசங்கிக்கையில் இந்தத் தீர்க்கதரிசனமானது உண்மை நிலையாயிற்று. சுவிசேஷத்தின் மூலமாக(வே) புறஜாதியார் தேவனுடைய இராஜ்யத்தின் குடும்பத்தினுள் வந்துகொண்டிருந்தார்கள். யூதர் மற்றும் புறஜாதியார் என்ற இரண்டு இனங்கள் சபை என்ற ஆவிக்குரிய ஒரே இனமாகிக் கொண்டிருந்தன. புறஜாதியார் யூதராக்கப்படவில்லை, மற்றும் யூதர்கள் புறஜாதியாராக்கப்படவில்லை; யூதரும் மற்றும் புறஜாதியாரும் தேவனுடைய "பரிசுத்த ஆசாரியக் கூட்டமான" (1 பேது. 2:5) கிறிஸ்தவர் களாகிக் கொண்டிருந்தனர். யூதர்களும் புறஜாதியாரும் ஒரே வழியின் - கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே - மூலமாகவே இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்; மற்றும் அவர்கள் - தேவனுடைய பிள்ளைகள் என்ற - ஒரே வகையான மக்களாகவே ஆகியிருந்தனர். கிருபையினால் இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியில் எந்த ஒரு படிநிலைத் தன்மையும் (உயர்வு தாழ்வு என்ற நிலை) அடையாளமாய்க் காணப்பட வில்லை. எவர் ஒருவரும் அவரது நாட்டுரிமை, வயது அல்லது கலாச்சாரம் போன்றவை எப்படிப்பட்டதாக இருப்பினும் மற்ற எவரைக்காட்டிலும்

பெரியவராக இருந்ததில்லை; எவரொருவரும் மற்ற எவரைக்காட்டிலும் தாழ்வானவராகவும் இருந்ததில்லை.

இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தில் கிறிஸ்தவ ஐக்கியத்தின் அளவீடுகளைச் சுட்டிக்காட்டும் மறைவான கருத்துக்களைப் பற்றி நாம் கவனிப்போம். இந்த ஐக்கியத்தின் பண்புகள் யாவை? இது எவ்விதத்தில் அர்த்தம் நிறைந்ததாக உள்ளது? இது எவ்விதத்தில் சூழ்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது?

## எல்லா பாவத்திற்காக கீழ் நோக்கியது

முதலில் நாம் சபையின் ஐக்கியத்தில் ஆழமான இயக்கத்தைக் காண்கின் றோம். இது எல்லா பாவத்திற்காகவும் கீழே வந்தடைந்த விலையேறப் பெற்ற இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே வந்திருக்கக் கூடிய ஒருமைப் படுத்துதலாக உள்ளது. தேவனுடைய கிருபைக்குத் தம் வாழ்வைத் திறந்து வைத்தால், எந்தப் பாவியும் இதனால் (இந்த இரத்தத்தினால்) அடையக் கூடிய தூரத்திற்கும் அப்பால் இருப்பதில்லை.

இந்த ஒப்புரவாக்குதலானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாக்கப் பட்டுள்ளதால், அந்த இரத்தத்தின் வல்லமையினால் ஏற்புடையதாகின்ற ஒரு ஆழத்தை இது கொண்டுள்ளது. பாவத்தின் இயல்பு எப்படி யிருப்பினும் அதை, மற்றும் பாவங்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருப்பினும் அவைகளை அவருடைய இரத்தமானது முற்றிலுமாக என்றென்றைக்குமாகச் சுத்திகரிக்க முடியும். ஆகையால், இந்த ஐக்கியத் திலிருந்து நம்மை விலக்கி வைக்கக் கூடிய ஒரே தடையாக இருப்பது மனஸ்தாபமின்மை மட்டுமே ஆகும். சகரியா "அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்" (சக. 13:1) என்று முன்னு ரைத்த பொழுது சுத்திகரிக்கும் ஒரு ஊற்று என்ற உருவத்தில் இயேசுவின் இரத்தத்தினுடைய சுத்திகரிக்கும் வல்லமை பற்றி அவர் முன்னுரைத்தார்.

பவுல், வேசி மார்க்கத்தார், விக்கிரகாராதனைக்காரர், விபசாரக்காரர், சுயபுணர்ச்சிக்காரர், ஆண்புணர்ச்சிக்காரர், திருடர், பொருளாசைக்காரர், வெறியர், உதாசினர் மற்றும் கொள்ளைக்காரர் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்ட பிறகு, "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான் களாக்கப்பட்டீர்கள்" (1 கொரி. 6:9-11) என்று கூறுவதன் மூலம் கொரிந்தியர் களை அவர் உற்சாகப்படுத்தினார். இந்த வசனமானது சுவிசேஷத்தின் பெரிய சத்தியமான வியக்கத்தக்க சத்தியத்தைக் கொண்டுள்ளது: பாவிகள் கிறிஸ்துவிடம் வரும்பொழுது, அவர்கள் கழுவப்படுகின்றனர் (சுத்திகரிக்கப் படுதல்), பரிசுத்தப்படுத்தப்படுகின்றனர் (பரிசுத்த பயன்பாட்டிற்காகப் பிரித்து வைக்கப்படுதல்), மற்றும் நீதிமான்களாக்கப்படுகின்றனர் (குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுதல்)!

பவுலின் அட்டவணையை மீண்டும் நோக்குங்கள், மற்றும் வெறுக்கத்

தக்க இந்தப் பாவங்கள் கொரிந்துவில் மனம் மாறியவர்களை சபையின் ஐக்கியத்தில் இருந்து நீக்கிப் போடவில்லை என்பதைச் சிறப்பாகக் கவனியுங்கள். அவர்கள் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் தேவனிடம் வருகையில், அவர் தம்முடைய குமாரனுடைய இரத்தத்தின் மூலமாக அவர்களை அந்தப் பாவங்களினின்று கழுவி, அவர்களை நீதிமான்களாக்கி, கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக அவர்களைக் கொண்டு வந்து, அந்த சரீரத்தினுள் இருந்த மற்ற யாவரோடும் அவர்களைச் சமமாக்கினார். சில பாவங்கள் மற்ற பாவங்களைக் காட்டிலும் பரவலானதொரு (தீய) செல்வாக்குள்ளவை என்பது உண்மையாகவே இருக்கின்றது, ஆனால் உண்மையான மனந்திரும்புதலுடன் ஒருவர் தேவனுக்கு பதில்செயல் செய்கின்றபொழுது எந்தப் பாவமும் மற்றும் எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட முடியும்.

விபசாரக்காரர் ஒருவர் இனியும் விபசாரக்காரராக இல்லை, திருடர் ஒருவர் இனியும் திருடராக இல்லை என்னப்படும் காலம் ஒன்றுள்ளது. “எப்பொழுது?” என்று நீங்கள் கேட்பீர்கள். தேவனுடைய மன்னிப்பில் அவ்வாறு இருக்க முடியும். பவுல், “இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின” (2 கொரி. 5:17) என்று எழுதினார். அவருக்கு நமது பதில்செயலின் மீது, அவர் நமது பாவம் நிறைந்த பழைய வாழ்வை நீக்கிப்போட்டு, புதிய வாழ்வைக் கொண்டு நம்மை உடுத்துவித்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் தெய்வீகத் தோழமையும் உள்ள பரலோகத் திற்குரிய வட்டாரத்தில் நம்மைக் கொண்டு வந்து சேர்க்கும் அளவுக்கு சுவிசேஷத்தின் கிறிஸ்து மிகவும் மகிமையுள்ளவராக இருக்கின்றார்.

இயேசுவுக்குள் ஒரு புதிய நபராக ஆவதைக் காட்டிலும் பெரிய விஷயம் வேறெதுவும் இருக்க முடியாது. ஒரு நபர் எங்கிருந்துள்ளார், அவர் என்ன செய்து கொண்டுள்ளார், அவர் என்ன கூறியுள்ளார், அல்லது அவர் எவ்விதம் சிந்தித்துள்ளார் என்பதை எதையும் தேவன் பொருட்படுத்தாமல், பலியான ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே அவரைக் கழுவி, கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபமாக்கும் பணியைத் தொடங்கி வைத்து, கிறிஸ்துவுக்குள் அவருக்கு ஒரு புதிய வாழ்வைக் கொடுக்கின்றார். இவ்விதமாக, ‘‘மீண்டும் தொடங்குதல்’’ என்பது இயேசு கிறிஸ்துவில் மட்டுமே அதிகாரப் பூர்வமான இடமாக உள்ளது.

சபையின் ஜீவனுடைய ஆழத்தை நாம் நினைவு கொள்ளுவோம். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக கிறிஸ்துவிடம் வந்து அவருடைய இரத்தத்தினால் கழுவப்படும்பொழுது அவர் அல்லது அவள் கிறிஸ்துவுக்குள் உண்மை நிறைவுடன் தங்கியுள்ள மற்ற யாவருக்கும் சகோதரராக அல்லது சகோதரியாக ஆகின்றார்/ ஆகின்றாள். ஒருவர் கழுவப்படும் பொழுது கறைகள் எதுவும் எஞ்சி நிற்பதில்லை; தேவனுடைய கிருபையினால் ஒரு முழுமையான சுத்தி கரித்தலானது மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகின்றது. எவரொருவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் அரைகுறையான வழியிலோ அல்லது ஒரு பகுதி மட்டுமான வழி வகையிலோ பிரவேசிப்பதில்லை. அவர் கிறிஸ்துவினு

டையவராக இருக்கின்றார் அல்லது கிறிஸ்துவைச் சேராதவராக மட்டுமே இருக்கின்றார். எவரொருவரும் சிறு பகுதி ஐக்கியத்திற்குட்பட்டவராகவோ, ஐந்தில் ஒரு பகுதி சுத்திகரிக்கப்பட்டவராகவோ அல்லது ஒருவேளையில் ஒரு பகுதி மட்டுமே கிறிஸ்துவுக்குள் கொண்டு வரப்பட்டவராகவோ இருப்பதில்லை. எவரொருவரும் படிப்படியாக இரட்சிக்கப்படுவதில்லை. படிப்படியாக அவர் போதிக்கப்படலாம் ஆனால் அவர் கிறிஸ்துவுக்குள் ஒரே படியில்தான் - கிறிஸ்துவுக்குள்ளாக அவரது ஞானஸ்நானத்தினால் - பிரவேசிக்கின்றார் (கலா. 3:27). ஒரு நபர் கிறிஸ்துவின் சரீரத்தினுள் முழுமையாகப் பிரவேசிக்கின்றார் மற்றும் அவர் கிறிஸ்துவின் சரீரத்தினுள் இருக்கும் மற்ற யாவரும் உள்ள அதே நிலையில் - முற்றிலும் நீதிமான்களாக்கப்பட்டு, முழுமையாக இரட்சிக்கப்பட்டுள்ள நிலையில் தான் - நிலைநிற்கின்றார். ஆகையால், கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை உணர்ந்தறிந்து கொள்ளவேண்டும், மற்றும் அவர்கள் ஒருவருக்கொருவர் தேவனுடைய குடும்பத்தின் சகோதர சகோதரிகளாக நடந்துக் கொள்ள வேண்டும்.

## எல்லா மக்களுக்குமாக சென்றடையத்தக்க

அடுத்து நாம் சபையின் ஆச்சரியம் நிறைந்த அகலத்தைக் காண்கின்றோம். தேவனுடைய குடும்பமானது மனித குடும்பத்தைப் போலவே வலிவார்ந்த வகையில் அகன்று விரிந்ததாக உள்ளது. இனம், பின்னணி அல்லது கலாச்சாரம் இவற்றினிமித்தமாக எவரொருவரும் இந்தக் குடும்பத்தில் பிரவேசிப்பதிலிருந்து தடை செய்யப்படுவதில்லை. அப். 15:16-18ல் யாக்கோபு, யூதர் மற்றும் புறஜாதியார் ஆகிய இரு சாராருக்கும் இரட்சிப்பை அளிப்பதற்கானதாக தேவனுடைய திட்டம் உள்ளது என்பதை நிரூபிக்க ஆமோஸ் 9:10, 11ஐ மேற்கோள் காட்டினார். இது தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டதாகவும் மற்றும் அப்போஸ்தலர்களின் பிரசங்கித்தலில் நிறைவேற்றப்பட்டதாகவும் உள்ளது.

புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் உலகில் அடிப்படையாக இரண்டு இனங்கள் மட்டுமே இருந்தன: யூதர்கள் மற்றும் புறஜாதியார். ஒருவர் யூதராக இல்லாதிருந்தால், அவர் புறஜாதியாராக இருந்தார். ஆகையால், தேவனுடைய இராஜ்யத்திற்கான கதவை தேவன் யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருசாராருக்கும் திறந்திருந்தார் என்பதற்கு நிரூபணம் தரப்பட்ட பொழுது, தேவன் அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முழு உலகத்திற்கும் - எல்லா இனங்களுக்கும் - வாய்ப்பைக் கொடுத்திருந்தார் என்பதற்கே நிரூபணம் உண்மையாகக் கொடுக்கப்பட்டிருந்தது.

பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பேதுரு மூலமாக இரட்சிப்பின் வழியை வெளிப்படுத்திய வகையில், ஆவியானவர் என்ன கூறும்படித் தம்மை (பேதுருவை) வழிநடத்தினார் என்பதை பேதுரு முழுமையாகப் புரிந்து கொண்டிராதவராய் இருந்த நிலையில் கூட, அவர் (ஆவியானவர்/தேவன்) சுவிசேஷமானது, (பின்) ஒரு நாளில் எல்லா

இனங்களுக்கும் அளிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்தினார். அவர், "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்தில் உள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (அப். 2:39) என்று கூறினார். "தூரத்தில் உள்ள யாவருக்கும்" என்ற சொற்றொடரானது மிகவும் உறுதியான வகையில் புறஜாதியாரின் உலகையே குறிப்பிடுகின்றது. இருப்பினும், பிற்பாடு கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்று புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதற்குத் தேவன் பேதுருவினிடத்தில் குறைந்தது ஐந்து அதிகார அறிவிப்புகளை அளித்து அவரை இயக்குவது அவசியமாய் இருந்தது: (1) அவர் கொர்நேலியுவுக்கு ஒரு தரிசனம் கொடுத்தார் (அப். 10:3-6); (2) அவர் பேதுருவுக்கு ஒரு தரிசனம் கொடுத்தார் (அப். 10:9-16); (3) அவர், பேதுருவை அழைக்க வந்தவர்களுடன் பேதுரு செல்லும்படி ஆவியானவர் மூலம் பேதுருவை அறிவுறுத்தினார் (அப். 10:19, 20); (4) கொர்நேலியு தாம் கண்ட தரிசனத்தைப் பற்றிப் பேதுருவுக்கு விவரித்தார் (அப். 10:30-33); மற்றும் (5) தேவன் பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்திருந்தது போலவே கொர்நேலியுவின் மீதும் அவரது குடும்பத்தார் மேலும் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தார் (அப். 10:44, 45). கொர்நேலியுவின் மீதும் அவரது குடும்பத்தார் மேலும் பரிசுத்த ஆவியானவரைப் பொழிதல் என்ற கடைசிக் குறிப்பானது பேதுருவுக்கு முடிவு செய்யும் காரணியாக இருந்தது. அவரது உடனடியான பதில்செயலானது நேர்மறையாகவும் தீர்மானமானதாகவும் இருந்தது:

> நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா? (அப். 10:47).

யூதர்கள் இரட்சிக்கப்பட்டிருந்த அதே நிபந்தனைகளின் அடிப்படையில் புறஜாதியாரும் இரட்சிக்கப்பட வேண்டி அவர்களுக்கு வாய்ப்பளிக்கப் படுவதற்கான நாள் வந்தது என்பது பேதுருவுக்குத் தெளிவாயிற்று.

பேதுரு இயேசுவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கையிட்ட நாளில் இயேசு பேதுருவுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியிருந்தார்: "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத். 16:19). இந்த வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்ளும் விதத்தில், பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்களுக்கு இராஜ்யத்தினுள் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகளை அறிவிக்கும் நற்பேறு பேதுருவுக்கு வழங்கப்பட்டது (அப். 2:37-39), மற்றும் கொர்நேலியுவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இரட்சிப்பின் வழியை அறிவிப்பதற்கும் அதே நற்பேறு அவருக்கு வழங்கப்பட்டது (அப். 10:34-43).

எனது வேதாகம வகுப்புகளில் நான் அப். 10க்குக் கடந்து வரும்

பொழுது, பெரும்பாலும் நான் வகுப்பில் யூத இனத்தைச் சேர்ந்தவர் யாராவது உள்ளாரா என்று கேட்பதுண்டு. வழக்கமாகக் கையெதுவும் உயர்த்தப்படாது. நான் தொடர்ந்து, அப். 10க்காக நாம் நன்றி நிறைந் தவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் சுவிசேஷத்தின் எந்த நிபந்தனை யின் கீழ் யூதர்கள் இரட்சிக்கப்பட்டனரோ, அதே நிபந்தனையின் கீழ் நாமும் இரட்சிக்கப்பட உரிமை பெற்றுள்ளோம் என்று புறஜாதியாரான நமக்கு அந்த அதிகாரம் எடுத்துரைக்கின்றது என்று அவர்களுக்குக் கூறுவதுண்டு. பிறகு நாங்கள் யாவரும் இணைந்து அப். 10க்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம்.

சபையின் உறுப்பினர்த்துவத்தின் ஆச்சரியம் நிறைந்த அகலம் பற்றி சிந்தித்துப் பாருங்கள். உலகின் நாடுகள் மற்றும் இனங்கள் பற்றிய காட்சியைப் பெறுங்கள். வித்தியாசப்பட்ட மொழிகள், பழக்க வழக்கங்கள், மற்றும் கலாச்சாரங்களை நினைத்துப் பாருங்கள். பூமியின் மக்கள் யாவரும் எங்கு வாழ்கின்றனர், அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஆண்களை - இளைஞராகவும் பலமுள்ளவராகவும் உள்ளவர்களையும் மற்றும் முதியவராகவும் ஊனமுற்றவராகவும் உள்ளவர் களையும் - மனதில் சித்தரித்துப் பாருங்கள்; பெண்களை - கன்னிப் பெண்களையும், திருமணம் முடித்துள்ள இளம் பெண்களையும், நடுத்தர வயதுடையவர்களையும் மற்றும் முதிர் வயதானவர்களையும் - மனதில் சித்தரித்துப் பாருங்கள். பிறகு, சுவிசேஷமானது எல்லாருக்கும் - எல்லா நாட்டவருக்கும், எல்லா இனங்களுக்கும், எல்லா இனக் குழுக்களுக்கும், எல்லா ஜாதிகளுக்கும், எல்லாக் குடும்பங்களுக்கும், மற்றும் கணக் கொப்புவிக்க வேண்டிய எல்லா வயதினருக்கும் உரியதாய் இருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்! எவரொருவரும் தவிர்க்கப்படவில்லை. பவுல் கூறியது போல, “யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமை யென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்’’ (கலா. 3:28).

## ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்குமாக மேல் நோக்கியது

மூன்றாவதாக நாம், சபையின் சகோதரத்துவத்தினுடைய வானளாவிய உயரத்தைக் காண்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினுடைய சென்றடையும் தன்மையின் காரணத்தினால், கிறிஸ்தவர்கள் பரலோக செல்வங்களின் சகல தாராளத் தன்மைக்கும் திறந்த கதவு ஒன்றைப் பெற்றுள்ளனர். சபை என்று அழைக்கப்படுகின்ற கிறிஸ்தவ இனமானது (அதில் உள்ள) ஒரு சிலர் மற்ற எல்லாரையும் விட மேலாக ஆசீர்வதிக்கப் பட்டுள்ள நிலையில் ஒரு சிலர் மட்டும் நற்பேறு பெற்றுள்ளதான விஷயம் எதையும் கொண்டிருப்பதில்லை. தேவனுடைய இராஜ்யமானது சம வாய்ப்புள்ள ஒரு இடமாக உள்ளது. மேல்வர்க்கம், நடுத்தரவர்க்கம் மற்றும் கீழ்வர்க்கம் என்ற பிரிவுகள் சபையில் அறியப்படாதவைகளாகும். இராஜரீக

ஆசாரியத்துவமானது இரண்டாந்தரக் குடிமக்களையோ அல்லது விளிம்புக் கோட்டின் ஆசாரியர்களையோ கொண்டிருப்பதில்லை. ஒருவர் கிறிஸ்துவுக்குள் வர மறுக்க முடியும், மற்றும் அதனால் அவர் இழந்து போகப்பட முடியும் (எபே. 2:11, 12); ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும் மற்றும் அவர் கிறிஸ்துவுக்கு விசுவாசமற்றவராகி இழந்து போகப்பட முடியும் (2 பேது. 2:21, 22); ஆனால் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து அவருக்குள் உண்மை நிறைவுடன் வாசம் பண்ணுகின்ற எவரொருவரும் எல்லாவற்றையும் பெற்றுள்ளார், அந்த நபரைப் பற்றி நாம், "பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ் காரியங்களாகிலும், வருங்காரியங் களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரி. 3:22, 23) என்று கூறமுடியும்.

கிறிஸ்துவுக்குள் உள்ள எவரொருவரும் தனிப்பட்ட மதிப்புடன் பவுலின் (பின்வரும்) போதனையை கூற முடியும்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே. 1:3). நாம் பவுலுடன் இணைந்து, கிறிஸ்துவுக்குள் நாம் "பரிபூரணமாக்கப்பட்டிருக்கிறோம்" (கொலோ. 2:10) என்றும் கூற முடியும். கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களுக்கு, "மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகல வித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவரா யிருக்கிறார்" (2 கொரி. 9:8) என்று கூறப்பட முடியும்.

---

*கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் சமமானவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் ஒருவருக்கொருவர் தேவனுடைய குடும்பத்தின் சகோதர சகோதரிகளாக நடந்துகொள்ள வேண்டும்.*

---

''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும்'' (2 பேது. 1:3) வேண்டிய ஒவ்வொன்றும் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாம் "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு" (எபி. 10:22) தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும், ஏனெனில் கிறிஸ்துவின் மூலமாக நாம் "ஒரே ஆவியினாலே பிதாவினிடத்திலே" (எபே. 2:18) சேருவதற்குச் சுயாதீனமான வழியைப் பெற்றுள்ளோம். நாம், "நிலையும் உறுதியும்" (எபி. 6:19) கொண்டதொரு நம்பிக்கையைப் பெற்றுள்ளோம். நாம் இயேசுவுக்குரியவர்களாய் இருக்கின்றோம், மற்றும் இயேசு - தம்முடைய சகல மகிமையிலும் கிருபை யிலும் - நமக்குரியவராய் இருக்கின்றார். கிறிஸ்து எங்கிருக்கின்றாரோ அங்கேயே நாம் இருக்கின்றோம், கிறிஸ்து கொண்டிருக்கின்ற யாவும்

நம்முடையதாக உள்ளன, ஏனெனில் நாம் கிறிஸ்துவுடன் கூட உடன் சுதந்தரராக இருக்கின்றோம் (ரோமர் 8:17).

இது ஒரு நாட்டின் அதிபராகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ இருப்பதைப் போன்றதாக உள்ளது. நாட்டில் உங்களுடைய தனிச்சிறப்பினிமித்தமாக உங்களுக்கு மிகச் சிறந்த உணவும், மிகவும் தகுதி வாய்ந்த உடைகளும், பாதுகாப்பிற்கு ஒரு மெய்க்காவலனும் மற்றும் உங்கள் வசிப்பிடத்திற்கு ஒரு அரண்மனையையும் நீங்கள் கிடைக்கப் பெறுகின்றீர்கள். ஒரு கருத்தில், நாட்டின் மூல ஆதாரங்கள் யாவற்றையும் நீங்கள் உங்களுடைய ஆணையின் கீழ் வைத்துள்ளீர்கள். நீங்கள் வாழ்கின்ற நகருக்குப் பாதுகாப்புத் தேவையென்றால் நீங்கள் நாட்டின் முழு இராணுவத்தையும் உடனே அழைப்பிக்க முடியும். உங்கள் பதவியினிமித்தமாக, நீங்கள் சாதாரணக் குடிமகன் பெற்றிராத நற்பேறுகள் மற்றும் அளிப்புகளுக்கு உயர்தரமான நுழைவைப் பெற்றுள்ளீர்கள்.

இது போலவே, தேவனுடைய பிள்ளைக்குரிய சகல ஐசுவரியங்கள், உரிமைகள் மற்றும் மூல ஆதாரங்கள் ஆகியவற்றிற்குச் சென்றடையும் வழியைக் கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றுள்ளோம். நாம் கிறிஸ்துவுக்குள் வாழ்கையில் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வழங்கியுள்ள எல்லாம் நமது பிடிக்குள்ளாக உள்ளது.

ஆசீர்வதிக்கப்படுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருப்பது ஒரு விஷயம், ஆனால் அந்த வாய்ப்பின் அனுகூலத்தை முற்றிலுமாய்ப் பயன்படுத்துதல்/மேற்கொள்ளுதல் என்பது வேறொரு விஷயமாய் உள்ளது. இராஜ்யத்தில் இருப்பதன் பயன்கள் யாவற்றையும் சென்றடையும் வழியை கிறிஸ்துவுக்குள் நாம் பெறுகின்றோம், ஆனால் (புறக்கணித்தல் அல்லது அறியாமையின் காரணமாக) நாம் ஆவிக்குரிய இந்த ஐசுவரியங்களைப் பெறத் தவறி விடலாம். இருப்பினும் ஒரு அற்புதமான சத்தியத்தை தவற விடக் கூடாது: தேவன் நெருங்கிய உறவுள்ளவராயிருக்கிறார் ஆனால் சலுகை காட்டுபவராய் இருப்பதில்லை. கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒரு மனிதர் மீட்கப்பட்டவர்களுக்குரிய ஏராளமான ஆசீர்வாதங்களின்றி வாழ்கின்றார் என்றால், அது அவருடைய தேர்ந்து கொள்ளுதலின் காரணமாயிருக்குமேயன்றி, ஒரு வாய்ப்பு அவருக்கு இழந்து போகப்பட்டதின் காரணமாய் இருக்காது. கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களுக்கு தேவன் கொடுத்துள்ள வழி வாய்ப்புகளைப் பயன்படுத்தாதவர் மட்டுமே கிறிஸ்துவுக்குள் இருந்தும் அவர் ஆவிக்குரிய ஏழ்மையில் வாழ்கின்றவராய் இருக்கின்றார்.

சபையினுடைய சமுதாயத்தின் வானளாவிய உயரத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். பூமியில் தேவன் வாய்ப்புக்களின் உண்மையான சமத்துவத்தை அளிக்கும் ஒரே இடம் இதுதான். கிறிஸ்துவுக்குள்ளான மற்றவர்களுடன் நாம் கொண்டுள்ள உறவுமுறையில் இந்தச் சத்தியத்தைப் பிரதிபலித்து வாழக் கடவோம். ஏழ்மை, தோற்றம், கல்வி, அல்லது இனம்/நாடு ஆகியவற்றின் காரணமாக நாம் மற்ற கிறிஸ்தவர்களை ஒருபோதும் தாழ்வாகக் கண்ணோக்கக் கூடாது. மற்ற கிறிஸ்தவரை அவரது/அவளது பதவி, அதிகாரம், நற்பேறுகள் அல்லது உடல் தோற்றம் ஆகியவற்றின் காரணமாக, நாம் ஒருபோதும் மேன்மைப்படுத்தவும் கூடாது. நாம்

*யாவரும் ஒன்றாகவே இருக்கின்றோம்; நாம் மற்றவர் ஒவ்வொரு வருடனும், மற்றவர்கள் ஒவ்வொருக்காகவும் வாழக் கடவோம் (1 கொரி. 12:27).*

## *முடிவுரை*

*கிறிஸ்துவின் சரீரம் என்பது ஒரு அகிலத்தின் சகோதரத்துவமாக உள்ளது. அப். 15ல் யாக்கோபின் கூற்றுப்படியாக, இந்த வகையான ஐக்கியமானது ஆமோஸ் 9:10, 11ல் தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்டது. இதன் நிறைவேற்றத்தைப் புறஜாதியாருக்கு அப்போஸ்தலிக்கப் பிரசங்கத்தில் நாம் காண்கின்றோம். இது ஒவ்வொரு பாவத்தையும் அழிப்பதற்காக கீழே வந்தடையுமளவுக்கு இயங்குகின்ற ஆழமுடையதாக இருக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினுடைய வல்லமையின் காரணமாக எந்த ஒரு பாவியும் இதிலிருந்து விலக்கப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் போகின்றது. இது எல்லா நாடுகளையும் மக்களையும் சென்றடையத் தக்கதான ஆச்சரியம் நிறைந்த அகலத்தை/பரப்பைக் கொண்டுள்ளது. இயேசு ஒவ்வொரு நபருக்காகவும் மரணத்தை ருசி பார்த்து, ஒவ்வொரு வருக்கும் இரட்சிப்பின் வாய்ப்பைக் கொடுத்துள்ளார் (எபி. 2:9). தேவனு டனும் ஒருவர் மற்றவருடனும் கொண்டுள்ள இந்த உறவுமுறையானது கிறிஸ்துவிலுள்ள கிருபையின் ஒவ்வொரு வளமான பண்பையும் அடையுமளவுக்கு வானளாவிய உயரம் கொண்டுள்ளது. கிறிஸ்துவுக்குள் வந்து, கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மிகுந்திருக்கின்றன!*

*சமத்துவம் மற்றும் வளமையின் இந்த வட்டாரத்தைக் காட்டிலும் அதிகமான வசீகரமுடைய வேறு எதையாவது நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா? உலகமானது சமாதானத்தைப் பற்றி நீளமாகப் பேசுகின்றது, ஆனால் நாம் உலகில் சிறிதளவே உண்மையான சமாதானத்தைக் காண்கின்றோம். ஏன்? ஏனென்றால் உண்மைச் சமாதானம் எங்குள்ளது என்பதையும் மற்றும் உண்மைச் சமாதானம் எவ்வகையில் கொண்டு வரப்பட முடியும் என்பதையும் புரிந்து கொள்ளத் தவறியதினால் அல்லவா? உண்மைச் சமாதானம் - தேவனுடன் சமாதானம், மற்றவர்களுடன் சமாதானம் மற்றும் நமக்குள்ளேயே சமாதானம் - என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளாக மட்டுமே அனுபவிக்கப்படவும் காட்சிப் படுத்தப்படவும் முடியும். வரவிருந்த சமாதானத்தின் இராஜ்யத்தைப் பற்றிக் கிறிஸ்துவுக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஏசாயா தீர்க்கதரிசனமாய்க் கூறியிருந்தார்:*

> *அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும்; கன்றுக் குட்டியும், பால சிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங் குழந்தை*

> *விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசா. 11:6-9).*

கிறிஸ்துவின் சரீரத்தில் மட்டுமே அறியப்படப் போவதாக இருந்த மகிமையான ஒருமைப்பாட்டை ஏசாயா, உயர்வான உருவக மொழி நடையில் சித்தரித்தார். ஏசாயாவுக்கு அது கிறிஸ்து வந்து தம்முடைய இராஜ்யத்தை நிலைநாட்டும் பொழுது நிறைவேறுவதாயிருந்த ஒரு தீர்க்கதரிசனமாக இருந்தது, ஆனால் நமக்கு அது கிறிஸ்துவுக்குள்ளான அன்றாடப் பயணத்தில் நாம் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றவைகளின் ஒரு பகுதியாக இருக்கின்றது. ஓனாய் போன்ற பண்புகள் கிறிஸ்துவின் மூலமாக புறாவைப் போலத் துன்பம் தராததாக ஆவதை நாம் தொடர்ந்து காண்கின்றோம் மற்றும் நாம் ஆட்டுக்குட்டி போன்ற ஆளுமைத் தன்மையுடையவருடன் பக்கம் பக்கமாய் நடந்து ஊழியம் செய்கின்றோம்.

கிறிஸ்துவுக்குள் நாம் ‘‘ஒரே புதிய மனிதனாக’’ இருக்கின்றோம், ஏனெனில் நாம் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத் தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்; மற்றும் ஒளியில் நம்முடைய அன்றாட நடக்கையினால் இந்த சமாதானத்தில் நாம் நிலைநிறுத்தப் பட்டுள்ளோம் (எபே. 2:15-18; 1 யோவா. 1:7).

நீங்கள் கிறிஸ்துவினுடைய சகோதரத்துவத்தின் அங்கமாய் இருக்கின் றீர்களா? அவ்வாறு இல்லையென்றால் நீங்கள் தவற விடுகின்ற கிருபை, உறவுமுறைகள் மற்றும் பெருந்தன்மையான வரங்கள்/கொடைகள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். “நாம் யூதராயினும், கிரேக்க ராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவி யினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்” (1 கொரி. 12:13).

மனிதரின் சகோதரத்துவத்தினுடைய அங்கமாயிருத்தல் மட்டும் போதுமானதாயிருப்பதில்லை. நாம் தேவனுடைய குடும்பத்தின் அங்கமாய் இருக்க வேண்டும்.

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. அப். 15ன் பின்னணியில் இருந்த நெருக்கடி என்ன?
2. இரட்சிப்பின் திட்டத்துடன் சில யூதக் கிறிஸ்தவர்கள் சேர்ந்திருந்த படி எது?
3. எருசலேமில் நடந்த மாநாட்டில் பேசியது யார்? அவர்கள் என்ன கூறினார்கள்?

4. எருசலேம் மாநாட்டில் தரப்பட்டிருந்த உரைகளை யாக்கோபு எவ்விதம் தொகுத்துரைத்தார்?
5. எருசலேம் மாநாட்டின் நோக்கம் என்னவாக இருந்தது?
6. சுவிசேஷ அழைப்பிலிருந்து விலக்கப்படுகின்றவர்கள் யார்? மற்றும் அவர்கள் ஏன் விலக்கப்படுகின்றனர் என்பவைகளை விவரிக்கவும்.
7. 1 கொரி. 6:9-11 பற்றிக் கலந்துரையாடவும், சுவிசேஷத்தின் நோக்கம்/பரப்பெல்லை பற்றி இந்த வசனப் பகுதி நமக்குக் கூறுவது என்ன?
8. நாம் கிறிஸ்துவுக்குள் வருகின்ற பொழுது தேவன் நமக்குத் தருகின்ற புதிய வாழ்வைப் பற்றி விவரிக்கவும்.
9. சபையில் ஒருவர் அரைகுறையாகப் பிரவேசிக்க முடியாது என்பது உண்மையா? உங்கள் பதிலை விளக்கப்படுத்தவும்.
10. சுவிசேஷம் - யூதர் மற்றும் புறஜாதியார் என்ற - எல்லா மக்களுக்குமானது என்பதை வேத வசனங்களிலிருந்து நிரூபிக்கவும்.
11. கலாத்தியர் 3:28ஐ விளக்கப்படுத்தவும்.
12. ‘‘ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுக்கும் சுயாதீனமாகச் சென்றடையும் வழி’’ என்பது எதனை அர்த்தப் படுத்துகின்றது?
13. எபேசியர் 1:3ஐ விளக்கப்படுத்தவும்.
14. ‘‘ஒருவர் புத்தகங்களைக் கொண்டிருக்கவும் அவைகளை உடையவராய் இல்லாதிருக்கவும் முடியும்’’ என்ற சொற்றொடரைப் பற்றிக் கலந்துரையாடவும். இந்தக் கருத்தைக் கிறிஸ்தவ ஆசீர்வாதங்களுக்கு எவ்விதத்தில் பயன்படுத்த முடியும்?
15. சமாதானத்தின் உண்மையான பாதையை விவரிக்கவும்.